நாள்: 30.07.2026

OP50/2023 JTW OP 232/2024

பெயர் கல்யாண்

எ.ம.சா.3

<u>**குறுக்கு விசாரணை**</u>

எதிர்மனுதாரர் கீர்த்தனா என் அண்ணன் மகள் ஆகும், அவருக்கு திருமணத்தின்போது 75 பவுன் நகை போட்டதாக என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அதில் எவ்வளவு நகையை திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் தேனி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது புகார் கொடுதது அந்த புகார் மனு உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணை நடந்ததாக கேள்விபட்டேன். விசாரணையில் என்ன பேசினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. காவல்நிலையத்தில் 5 லட்சம் ரொக்கமும், 75 பவுனில் 44 பவுன் நகையை என் அண்ணன் மகள் பெற்றுக்கொண்டதாக பேசி முடித்து ஒரு ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் அண்ணனும், அவரது மனைவியும், நானும் சாட்சி கையெழுத்து போட்டுளோம். எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் 29 பவுன் நகையையும், 20.06.2023 ம் தேதி கொடுத்து 7 பவுன் தாலிசெயினையும், வைர மோதிரத்தையும் மதுசூதனிடம் திரும்ப ஒப்படைக்கவேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அண்ணன் மகளுக்கு தான் குழந்தை பெற்றுக்கொள்வதற்காக மருத்துவ ரிதீயாக தகுதி இல்லை என்றும், மனுதாரர்க்கு நல்ல தகுதி உள்ளது என்றால் சரியல்ல. ஆனால் மேற்படி உண்மையை மறைத்து மனுதாரர் மருத்துவ பரிசோதனைக்கு வரவில்லை என நான் உண்மைய்கது புறம்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது என் மகள் அவர் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என OP 232/2024 தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

இரண்டு வழக்கும் நிலுவையில் இருக்கும்போது காவல் துறையில் புகார் கொடுத்தோம் என்றால் மனுதாரர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதால் கொடுத்தோம். எதிர்மனுதாரர் தரப்பில் பணம் பறிக்கும் நோக்கோடு காவல்துறையில் புகார் கொடுததும், விவாகரத்து கொடுப்பதாக சம்மதித்து எழுதிக்கொடுத்துவிட்டு வேண்டுமென்றே வழக்கு நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. தாலியை கழட்டி கொடுப்பதாக ஒத்துக்கொண்டாலே அது விவாகரத்து சமம் என்றால் சரியல்ல. தாலி செயின் என்று தான் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. தாலியை பற்றி சொல்லவில்லை. மனுதாருக்கு 2 வது திருமணம் நடந்தது பற்றி 2 திருமணம் செய்த பெண் உமாசங்கரி உறவினர் பாலமுருகன் எனக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பிய பதிவை வைத்து நான் சாட்சியம் அளித்துளேன். பாலமுருகனை என் தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். நான் சொல்வது போல் எந்த 2 வது திருமணம் நடைபெறவில்லை என்றும், நவீன கால தொழில்நுட்பத்தை பயன்படுததி போட்டா தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்த புகைப்படம் சாட்சிய சட்டம் நடைமுறையை பின்பற்றி தாக்கல் செய்யதா நிலையில் அதை ஒரு சான்றாவணமாக எடுத்துக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. மனுதாரர் ஒரு அரசு பணியில் இருப்பதால் அவரிடம் இருநது கூடுதல் பணம் பறிக்கும் நோக்கோடு இருப்பதால் அவர் இரண்டாவது திருமணம் செய்து

கொண்டார் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என் அண்ணன் மகள் அடிக்கடி வீட்டை மாற்றி, ஆடம்பர வாழ்க்கை செய்யவேண்டும் என மனரீதியாக மனுதாரருக்கும், அவர் பெற்றோருக்கு தொடர் கஷ்டங்களை கொடுத்தால் தான் அவர் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் அண்ணன் வீட்டார் மனுதாரர் வீட்டிற்கு சென்று அடித்து, கொலை செய்ய முயற்சித்ததாக குமுளி காவல்நிலையத்தில புகார் கொடுக்கப்பப்பட்டு அது சம்பந்தமாக விசாரணை நடைபெற்றது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.30 17:17:19 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்